**செய்தி வெளியீடு எண்:646** **நாள்: 01.10.2017**

# செய்தி வெளியீடு
## ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவலர் விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, (i) திரு.எஸ்.கண்ணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம், (ii) திரு.க.ராமகிருஷ்ணன், சார்பு ஆய்வாளர், மத்திய புலனாய்வுப்பிரிவு, சேலம் மண்டலம், (iii) திரு.கோ.நாராயணன், தலைமைக் காவலர் எண்.668, பொன்னை காவல் நிலையம், வேலூர் மாவட்டம், (iv) திரு. இ.ஜோசப், தலைமைக் காவலர் 1798, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, விழுப்புரம் மாவட்டம் மற்றும் (v) திரு.கோ.நாராயணன், முதல் நிலை காவலர் 36042, S9 பழவந்தாங்கல் காவல் நிலையம், சென்னை பெருநகர காவல் ஆகியோருக்கு, கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருது வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2018–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.40,000/–மும் வழங்கப்படும்.

**நிரஞ்சன் மார்டி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**